

உ

ஓம்:

சிவமயம்.

கணபதி துணை.

பத்திநெறி.

:0:

அன்புவழிபாடு.

அருள்வாக்குகளின் சாரமாயுள்ளது.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்,
மெய்ப்பொருள் காண்பதறிவு"

இஃது,
பெரியோர்களனுக்கிரகத்தினால்,
சென்னபட்டணம் பத்திமார்க்கப்
பிரசங்க சபையின் ஓர் அங்கத்தவரால்,
மஹாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்க்கப் பிபட்டது.

சென்னை,
ஜீலகஷ சித்திரைமீ



உ

ஓம்:

கணபதிதுணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பத்திநெறி.

:o:

அன்பு வழிபாடு.

விநாயக வணக்கம்.

காசிவாழ் விஸ்வநாதன் கயிலையில் வாழுநாதன்
மாசிலா மன்றிலாடி மன்னுயிர்க் கருள்செய்நாதன்
தேசுலாம் புவனமெங்கும் திருவருள் சுரக்குநாதன்
தாசனா யென்னையாண்ட தாணைவவாழ் நாதன்றானே.

வேதம், சிவாகமம், ஞானயோகம்.

அகச்சமயம் புறச்சமயம் முதலான சகல சமயங்களுக்கும் பொதுவாயுள்ள தருமநூல், வேதமென்றும், நான்கு வேதங்களுள்ளும் சிறந்தது, "பண்டையிராவணன் பாடியுய்ந்த" தாகிய சாமவேதமென்றும், அதின்மத்தியில் வேதசிரப்பொருளாகியுள்ள "ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை" யென்றும், "காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி யோதுவார்தமை மெய்நெறிக்குய்ப்பது, வேதநான்கினும் மெய்ப்பொருளானது-நாதநாம நமச்சிவாயவே" என்றும் சிறப்பித்துச்சொல்லபபட்ட ஸ்ரீ பஞ்சாட்சரத்தை விரித்துச்சொல்வதும், சைவசமயிகட்கு விசேஷ தருமநூலாயிருப்பதும் சிவாகமமென்றும், பெரியோர்களால் உறுதியாகக்கைக் கொள்ளப்பட்டிருக்கின்றது. "அருணூலு மாரணமு மல்லாது மைந்தின், பொருணூறெரியப் புகும்."

"அளவைகளாலும் வேத முதனூல்களாலு மயன்மாயனாலு மளவாக்கள" வனாயிருந்தும், "ஆரண மாகமங்க ளருளினாலுருவுகொண்டு காரணன்" ஆகிய "அருபரத்தொருவன் அவனியில்வந்து குருபரனாகி" யருளானாகில் "காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்றபடி பக்குவ ஆன்மாக்களுக்கு உண்ணின்றும் முன்னின்றும் சிவபெருமான் தன்னுடைய அனந்தகுணங்களில் ஆன்மாக்கள் அறிந்துய்வதற்கு அவசியமான வரையில் மாத்திரம் தன்னை யுணர்த்தி தான் எக்காலமுமுள்ள பொருளாகிய "சத்து" என்றும், பேரறிவுமயமாக இருக்கின்ற "சித்து" என்றும், பேரன்புமயமா யிருக்கின்ற "ஆனந்தம்" என்றும், இவ்வண்ணம் தான் ஒப்புயர் வில்லாத சத்து + சித்து + ஆனந்தம், ஆகிய "சச்சிதானந்தம்" என்னும் பொருளென வேதசிவாக மங்கள்வாயிலாக உணர்த்தியும் இருக்கின்றனர். அப்பால் சிற்றறிவுடைய நம்போலியர்கள் நல்வழிப்படும் பொருட்டுப் பக்குவ ஆன்மாக்களாய் அருள்வழி நிற்போர்களாகிய ஆன்றோர்கள் முன்னிலையாய் வேதசிவாகமங்களின் சாரமாய் ஆனந்தரசங்கனியப் பெற்றனவாகிய தேவார திருவாசகம் முதலிய அருள்வாக்குகளினாலும், உணர்த்தியிருக்கின்றனர். "குருவே சிவமெனக் கூறினன்நந்தி" என்னும் பெருமிதமுடைய அருட்குரு முன்னிலையாய் ஞானநூல்களை யோதி ஞானபூசையாகிய ஞானயோகத்தினாலும் உள்ளதை உள்ளபடி யுணர்ந்து சித்தொடு சித்தாய்க்கலந்து, "காகத்திருகண்ணுக் கொன்றேமணி கலந்தாங்கிருவர் ஆகத்துளோருயிர் கண்டனம்" என இருப்பர்கள் சிவஞான யோகிகள்.

அன்பு அவசியம்.

அஃதன்றியும்,

அன்புசிவ மிரண்டென் பரறிவிலார்
அன்புசிவமாவ தாருமறிகிலார்
அன்புசிவமாவ தாருமறிந்தபின்
அன்பேசிவமா யமர்ந்திருந்தாரே.

எனப் பரம கருணாநிதியாகிய சிவபெருமான் ஆனந்தமயமா யிருப்பதை யுணர்த்தி, "என்பேவிறகாயிறைச்சி யறுத்திட்டுப், பொன்போன் மேனிபொரிய வறுப்பினும், அன்பொடுருகியகங்குழைவார்க் கன்றி, என்பொன்மணி

யினை யெய்தவொண்ணாதே" எனத் திருமூலநாயனார் சுவாமிகளால் ஆனந்தமயமாயிருக்கும் சிவபெருமானை அன்பினால் மனம்கரைந்து ஆனந்தமயமாய்க் கலந்திருக்கவேண்டிய தெனக்கூறப்பட் டிருக்கின்றது.

இதனை வற்புறுத்தியன்றோ, ஸ்ரீகைலாசபதியாகிய சிவபெருமானால் திருப்பெருந்துறையில் ஞான தீக்ஷைசெய்யப் பெற்றப்பின்பு அனுபவசித்தராய்க் "கைகாட்டித் தம்முருவங் காட்டாமல் மறைந்து" சிவத்துடன் இரண்டறக் கலந்த நமதுஅருட்பெரும் குரவராகிய மாணிக்கவாசகசுவாமிகளால் "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச்சோதியான்" என அன்பின் இன்றியமையாத விசேஷம் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதனை மேலும் வற்புறுத்தியன்றோ,

"அன்பினாலடியே னாவியோடாக்கையானந்தமாய்க்கசிந்துருக" என்றும் "அன்பெனுமாறுகரை யதுபுரள" என்றும், "கற்றாவின் மனம்போலக்கசிந்துருக வேண்டுவனே" என்றும் "உள்ளந்தானின்றுச்சியளவு நெஞ்சாயுருகாதால்" என்றும், "அளியேனென்ன ஆசைப்பட்டேன்" என்றும், "தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமானென்றேத்தி" என்றும், "அங்கமெலா மழுகு தொழுநோயராகி ஆவுரித்துத் தின்றிடும்புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகிலவர் கண்டீர்யாம் வணங்கும் கடவுளாரே" என்றும் "அழுகேனின்பா லன்பா மனமாயழல் சேர்ந்த, மெழுகே யன்னார்" என்றும், "அழுமதுவே யன்றி மன்றென் செய்கேன்" என்றும், "துளியுலாங் கண்ணராகித் தொழுதழுதுள்ள நெக்கிங் களியிலாத வரைக்கண்டாலம்ம நாமஞ்சுமாறே" என்றும் "அங்கைகொடு மலர் தூவி அங்கமது புளகிப்ப அன்பினாலுருகி விழிநீராறாக ஆவேச ஆசைக்கடற்குள்மூழ்கி" என்றும், "அன்பிற்கரைந்து கரைந்துருகி" என்றும், "அன்பே யமையும் அதிகைக்கெடிலவீரட்டானத்துறை யெம்மானே" யென்றும் "ஆரூரா வென்றென்றே யலறா நில்லே" என்றும், "பேரானந்தம் பேராமை வைக்கவேண்டும்" என்றும், "கண்ணீராறாய்ப்பெருகிக் கிடப்பதென்றோ" என்றும் "வேண்டும் தனையும்வாய் விட்டலறி விரையார்மலர் தூவி" என்றும், இன்னும் அளவிறந்தவாக்குகளால் நமது அருட்பெருங் குரவர்கள் சிவபெருமான் மீது வைக்கும் அன்பின் பெருமையைப் பலவாறாகப் பாராட்டி யிருக்கின்றனர்.

பலன்.

அன்பினால் வழிபட்டால் யாதுபிரயோசன மடையலாமென வினவுவார்கட்கு விடையாக, "கன்றுமுட்டியுண்ணச் சுரந்தசாலியவை யென்ன" எனவும் "தீர்ந்தஅன்பாய அன்பர்க்கவரினும் அன்பன்" எனவும், "பத்திவலையிற் படுவோன்" எனவும், "ஆனந்தனேயகநெக வள்ளூறு தேனொப்பனே" எனவும், "தெளிந்தார்த மூனையுருக்கும்பரான்" எனவும் "புன்புலால் யாக்கை புரை புரைகனியப் பொன்னெடுங் கோயிலாப்புகுந்தெ னென்பெலாமுருக்கியாண்டான்" எனவும், "அன்பர்க்கடியான்" எனவும், "அன்பர்க்கெளியான்" எனவும், "அரும்பொனே மணியே யென்னன்பே யென்னூறு மானந்த வெள்ளமே" எனவும், "உள்ளுருகிப் பெருகிநெக்காடி யாடியானந்த மதுவே

யாக அருள்கலந்தே'' எனவும், ''இரும்பைக்காந்த மிழுக்கின்ற வாறெனைத் திரும்பிப்பார்க்க வொட்டாத நந்தேவன்'' எனவும், ''சிறியோமை யோவா துள்ளங் கலந்துணர்வாயுருக்கும் வெள்ளக்கருணே'' எனவும், ''அளித்துவந் தெனக் காவவென்றருளியச்சம் தீர்த்த அருட் பெருங்கடல்'' எனவும், ''ஈறிலாப்பதங்கள் யாவையுங்கடந்த இன்பமே யென்னுடையன்பே'' எனவும் ''தனையடைந்த நாயேனை ஆனந்தவெள்ளத் தழுத்துவித்தான்'' ''ஆனந்தக்கூத் தனருள் பெறினு மவ்வணமே ஆனந்தமாகிநின்றாடா மோதோணேக்கம்'' எனவும், இப்படி அனந்த வாக்குகளினல் நமக்கு மன உறுதிபயக்கும் வண்ணம் செய்திருக்கின்றனர்.

அதுவுமன்றி,

''அறுவர் கொங்கை விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுத'' சண்முக ஞானசோதிக் குழந்தை சீகாழியில் ஞானசம்பந்த மூர்த்தியாகத்திருவவதாரம் செய்தகாலத்தில், ''எனதொழிவிலின்பக் கருணைபொழிவா னெடுத்தகை ''யிறைச் சுட்டிக்காட்டி ''தோடுடையசெவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக், காடுடையசுடலைப்பொடிபூசியென துள்ளங்கவர்கள்வன், ஏடுடையமலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த, பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே'' என உலகமாதாவாகிய எம்பிராட்டியாருடைய ஞானப்பாலுண்ட பெருமிதத்தினல் விம்மி விம்மி யழுத பேரன்புப் பெருக்கன்றோ என்றைக்கும் பத்தர் மனதைக் கரையச் செய்வது. மேலும் உருத்திரமூர்த்தியின் அருட்கண்ணிலிருந்து தாரை தாரையாகவரும் சிவகாருண்ணியப் பெருக்கன்றோ சிவனடியார்களுக்குரிய விசேஷ சிவசின்னமாகிய உருத்திராட்ச மாலை யாயணியப்பெறுவது.

சிவபூசை முறைமை.

இவ்வண்ணம் ஞானபூசையினலும், ''கையொன்றுசெய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப், பொய்யொன்று வஞ்சக நாவொன்றுபேச'' வென்பன முதலிய குற்றங்களின்றி,''சிந்தனைநின்றனக்காக்கி நாயினேன் றன் கண்ணிணை நின்திருப்பாதப் போதுக்காக்கி, வந்தனையும்மலர்க்கே யாக்கி வாக்குன் மணிவார்த்தைக் காக்கி யைம்புலன்களார'',''மனமது நினையவாக்கு வழுத்த மந்திரங்கள் சொல்ல, இனமலர்கையிற் கொண்டங் கிச்சித்ததெய்வம் போற்றி,'' ''உரைமாண்ட வுள்ளொளியுத்தமன் வந்துளம் புகலும் கரைமாண்டகாமப்பெருங்கடலைக் கடத்தலுமே இரைமாண்ட இந்திரியப் பறவையிரிந்தோட,'' அகக்கரணம் புறக்கரணம்யாவும் ஒருமித்து மனமடங்கி மனதுருகி ''எல்லாமிறந்த யோகியர்க்கு மெட்டாதிருந்தபேரன்பு'' ஆகிய சிவநேயத்தமுந்திச் செய்வதாகிய அகப்பூசை புறப்பூசை யென்னும் அன்போடமைந்த பூசையினலும், தேவாரதிருவாசகம் முதலிய தோத்திரங்களைக் ''காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஒதி'' யும்''முத்தனே முதல்வா முக்கணுமுனிவாமொட்டறு மலர்பறித்திறைஞ்சிப், பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்பரகதி கொடுத்தருள் செய்யும், சித்தனே செல்வத் திருப்பெருந்துறையுணிறை மலர்க்குருந்த மேவியசீ, ரத்தனே யடியேனுதரித் தழைத்தா லதெந்துவேயென்

றருளாயே" என்றும் "தாயாய் முலையைத்தருவானே தாராதொழிந்தாற்சவலையாய், நாயேன்கழிந்துபோவேனோ நம்பியினித் தானல்குதியே, தாயேயென்றுன் தாளடைந்தேன் தயாநீயென் பாலில்லையேல், நாயேனடிமையுடனாக வாண்டாய்நான்றான் வேண்டாவோ", "பானினைந்தூட்டும்தாய்" என்பன முதலிய அனேகதோத்திரங்களிலியன்ற வரையில் சொல்லி அகோராத்திரம் தியானத்தினாலும் சிவபஞ்சாட்சர மந்திரவிசேஷத்தினாலும் "அழலது கண்டமெழுகதுபோலத், தொழுதுளமுருகி, யழுதுடல் கம்பித் தாடியும் அலறியும் பாடியும் பரவியும், இடையறா வன்பிற் பசுமரத்தாணி யறைந்தாற் போலக், கசிவதுபெருகி" ஆனந்தபரவசர்களாகிப் பரமபதியாகிய சிவ பரம்பொருளொன்றே சிந்தையில் மேலிட்டிருக்கவும் தம்மையும் பிரபஞ்சத்தையும் மறந்து முன் மாயா மயமாகக் கண்டனவெல்லாம் அருள்மயமாய்ப் பார்த்தும், செக்கைநாள்தோறும் பார்த்துவந்த பழக்கத்தினால் சிவலிங்கமுஞ் செக்குப்போலத்தோற்றப்படும் நாயின்குணத்தை மறந்து, சிவலிங்கத்தையே நாள்தோறும் பார்த்து வந்த பழக்கத்தினால் பிராமணக் குழந்தைக்குச் செக்கும் சிவலிங்கமெனத் தோன்றியவாறு போல "பரத்தைமறைத்தது பார்முதற்பூதம், பரத்தின்மறைந்தது பார் முதற்பூதம்" என எங்கும் சிவமயமா யெங்கும்சுகவடிவா யெங்கும் சிவலோகத் தெல்லையாய்க் கண்டிருப்பர்கள் சீவன்முத்தர்களெனப் பெரியோர்கள் சொல்வார்கள்.

அன்பின் இன்றியமையாமை.

அப்படிப் பத்தியில்லாவிடில், "நன்னெஞ்சத் தன்பரெல்லாம் நாதனைவந்தின்பணைந்தார் ,வன்னெஞ்சத்தாலேநான் வாழ்விழந்தேன் பைங்கிளியே" எனச் சிவப்பெரு வாழ்விலிருப்ப தருமை யன்றியும், சீவகாருண்ணிய மிருக்கமாட்டாது. "ஈசனுக் கன்பில்லா ரடியவர்க் கன்பில்லா ரெவ்வுயிர்க்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார், பேசுவதெனறிவிலாப் பிணங்கள்", "அன்பிலாரெல்லாம் தமக்குரிய ரன்புடையா ரென்புமுரியர் பிறர்க்கு", என்னும் ஆன்றோர்வாக்கியமிருக்கும் திறமை காண்க.

அஃதன்றியும்,

ஆகமவிதிப்படி செய்யப்பட்ட பூசை நைவேதனங்களே அதிஉத்தம விசேஷ மாயினும், அன்பில்லா விடத்துக், "கசிந்துருகி நில்லாப்பிழை" யென்னும் குற்றமுடையவாகலின் அன்பிலாப் பூசையினின்றும் அன்போடிசைந்த பூசையாகிய கண்ணப்பநாயனார் அறியாமையினால் மாமிச நைவேதனத்துடன் பேரன்புப் பெருக்கினால் தன்கண்களையும் பறித்து சுவாமிக்குச் சாத்தத்துணிந்து செய்தபூசையைக் "குற்றம் செய்யினும் குணமெனக்" கொண்டது அன்பு விசேஷம் அமையப்பெற்றமையினா லன்றோ? ஆனதுபற்றி யன்றோ "கண்ணப்பனொப்பதோ ரன்பின்மை கண்டபின்" என்று மாணிக்கவாசக சுவாமிகளால் வியக்கப்பட்டுள்ளது. "அரனடிக்கன்பர் செய்யும் பாவமுமறமதாகும், பரனடிக்கன்பிலாதார் புண்ணியம்பாவமாகும்" என்று அருணந்தி சிவாசாரிய சுவாமிகளாலும் சொல்லப்பட்டிருப்பதுடன் "பாதகத்துக்குப்பரிசு வைத்தான்" என்றும் வற்புறுத்தப் பட்டுமிருக்கின்றது. ஏனெனில், சிவநேயமேலீட்டினால் தம்வயமின்றிப் பரவசத்தரா யிருத்தல்பற்றி "இவனுலகில் இதமகிதஞ் செய்தவெல்லா மிதமகித மிவனுக்குச் செய்தார்பாலிசையு,மவனி

வனும் நின்றமுறை யேகனுகி யான்பணியினின்றிடவு மசலுங்குற்றஞ், சிவனு மிவன் செய்தியெலா மென்செய்தி யென்றுஞ் செய்சதெனக் கிவனுக்குச் செய்ததென்றும், பவமகல வுடனுகி நின்றுகொள்வன் பரிவாற் பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கிவிடுமே" எனஇருத்தலால்.

அஃதன்றியும்,

இல்வாழ்வின் கண்ணும் "ஏகபத்தினிதர்மம்" என்றும், "பதிவிரதா தர்மம்" என்றும் சொல்லப்பட்டபடி தர்மபத்தினியே யன்றி மறுபெண்கள் மேலிச்சை வையாத நாயகனும் தன் பத்தாவின்மேலன்றிப் பிறபுருஷர்மேற்காதல்வையாத நாயகியும் "காதலிருவர் கருத்தொக்க ஆதரவுபட்டதே யின்பம் பரனை நினைந்திம்மூன்றும் விட்டதே பேரின்பவீடு"என்றும் ஒளவைப் பிராட்டியார் சொன்னதும் இப்பயன்குறித்தே.

"கனியிருக்கக் காய்கவர்ந்தகள் வனேனை" என்றும் சொன்ன வாக்கின் பொருளு மிஃதே.

சமயவிரோத மின்மை.

"விரும்பும் சரியைமுதல் மெய்ஞானநான்கும், அரும்புமலர்காய்கனிகளன்றே பராபரமே"

என்றபடி ஆன்மாக்களின் பக்குவத்துக் கிசையப் படிப் படியாயறிவும் பத்தியு மேலேற வேண்டியிருக்கின்றன. "ஆட்பாலவரும் அருளும்தன்மையும் கேட்பான் புகிலளவில" என ஓரே சமயவழியில் பலவிதமாகப் பத்தியும் ஞானமும் ஏறவேண்டியிருக்கின்றன, அஃதன்றியும் பலவிதசமயசாஸ்த்திர நூல்களும், பத்திநூல்களும், தேச கால ஆசாரத்தின்படியும், ஜென்மாந்தரங்களில் செய்துகொண்ட கன்மவினைக்கும், புண்ணிய பாவ கன்ம பலன்களுக்கும் இசையக்காலாந்தரங்களில் ஈஸ்வரசித்தத்தின்படியும் ஏற்பட்டிருக்கின்றன அன்றே. "புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கு"மென்றிருத்தலால் யார் யார் "யாதொருதெய்வங்கொண்டு" எர்தெந்தச்சமயாசாரப்படி நடப்பாராயினும் அவர்களை நிந்தனை செய்யாமலும் அவர்களுடன் வெறுப்புறாமலும் இருக்க வேண்டியதும் கடமையாயிருக்கின்றது. காலாந்தரத்தில் அரும்பாய் மலராய்க் காயாய்க் கனியாய்ப் பக்குவத்தை யடைந்து கடைத்தேறுமட்டும் இருவருள் காத்திருந்து நடப்பித்து வழிப்படுத்து மன்றோ? "என்று பருவமுனக்செய்தமோ வென்று நா, னன்று முதலின்றளவு மாசித்தேன்—தன்றிரிய, விப்பிறப்பி னுடினுயென்னை நீமாளவக, வெப்பிறப்பு நாடினேன் யான்" எனும், திருக்கருணையிருந்தபடி யென்னை.

வேதாந்த சித்தாந்த விரோத மின்மை.

இவ்வண்ணம் வேதாந்த மகாவாக்கியமான "தத்துவமசி" வாக்கியத்தின் பயனும் "வேதாந்தத் தீதில் பொருள்கொண்டுரைக்குநூல்சைவம்" எனச் சொல்லும் சைவ சித்தாந்த நூல் கூறியபடி தற்போதம் ஒழிந்து சிவோகம் எனும் சிவானந்த சிவபோகப் பெருவாழ்வில், "கரும்பைத் தேனைப் பாகைக் கனி யமுதைக் கண்டைக்கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே" என்றிருக்கும் வாக்கும்மாறுபாடின்றி வேதாந்த சித்தாந்த சாரமாயுமிருப்பதாகிய சச்சிதானந்த வஸ்துவைக்கலந்திருப்பது முத்தியெனக்கூறப் பட்டிருக்கவும், அஞ்ஞான ஆகாமியமேலிட்டினுல் நானேபிரமமாதலால்நான் வணங்க வேண்டிய வஸ்துவொன்றிலதே எனச்சிலர்மனம் மயங்கியும், மாயா வசத்தராய் தமது மனம்போன வழியெல்லாம் இச்சைப்படி செய்யும் ஆகாமியச்செய்கைக்கும், அருள்வயத்தராய்த் தம்மை மறந்துநிஷ்காமிகளாய்ச் செய்பவர்கள் செய்கைக்கும், உள்ள தாரதம்மியம் தெரியாது "எல்லாம்சிவன்

செயல்" "நம்மாலாவதென்ன, ஊழிற்பெருவலியாவுள" "அன்றெழுதினவிதியை அழித்தெழுதத்தெய்வத்தாலுமாகாதே" என்னும் இவ்விதமான அநேகமயக்கமொழிகளைக் கூறிச்சிலர் தம்மையும் பிறரையும் மயக்கிப் பவச்சேற்றிலழுந்தியும் அழுந்தச்செய்தும் மயங்குவார்கள். "தவத்தினிற் பெரிதொன்றுண்டோ" என்ற வாக்கின் பெருமிதத்தை யோசியாமலும், ஸ்ரீ மார்க்கண்டேய சுவாமிகள் தவவிசேஷத்தினால் இயமனைவென்றதையும் "விளக்கொப்புக விருள்மாய்ந்தாங்கொருவன் தவத்தின் முன்னில்லாதாம் பாவம்" என்றும், "மடங்கவென்வல்வினைக்காட்டை நின்மன்னருட்டீக்கொளுவும் விடங்க" என்றும் "விண்ணுறவடுக்கிய விறகின் வெவ்வழலுண்ணிய புகிலவை யொன்றுமில்லையாம்" என்றும் இருக்கும் அருள் வாக்கியங்களின் சாரத்தைச் சிந்தியாமலும், "கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே" என்றும் "கல்வினும் செம்பினுமோ விருப்பானெங்கள் கண்ணுதலே" யென்றுமிருக்கும் வாக்கியங்களின் உண்மையைப் பேத வுணர்வினால் மறந்து வீண் சாக்குப் போக்குகளைச் சொல்லியும், பத்தியை அலட்சியம் செய்வார்சிலர். "திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவனெனவேகண்டவர்க்குச் சிவனுறைவனங்கே" என்பதின் உண்மையைச் சிந்தியாமலும் "பால் வாரியின் மீன் போன்ற மலவாழ்வில" ழுந்தியும், அருள் வழியாய்நமக்குக் கிடைத்த நன்மை நமது சாமர்த்தியத்தினால் வந்ததென்றும், நம் தீவினையின் பலன்கள் ஈஸ்வரனாலும் பிறராலும் வந்தனவென்றும் ஈஸ்வரன்மீதும் பிறர்மீதும் பழியையேற்றியும், இவ்வண்ணம் மயங்குவோர் மயங்காவண்ணம் "ஏக மிரண்டென்னுமற் சும்மாதிரு" என்பது முதலிய அருள்வாக்குகளால் ஆன்றோர் வாயிலாகச் சிவபெருமான் தன் கருணை வழியில் சிற்றறிவுடையவர்களாகிய நம்மனோர் உய்யும் வண்ணம் உணர்த்தியிருக்கின்றனர். "முன்னின்றாண்டாயெனை முன்னம் யானுமதுவே முயல்வுற்றுப் பின்னின்றேவல் செய்கின்றேன்" என்றும் "சிவபெருமான் றானே வந்தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்" எனவும் நடத்து முறைமையைச் சொல்லிய திருவாக்குகளைக் கடைப்பிடித்திருந்து திருவருளை யெதிர்பார்த்து "நீ பரனருளை நெஞ்சினினைவையேல் நிறைந்த பூசை" யாயும் சிந்தித்திருந்தால்,

"முத்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப், பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம், சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட அத்தனெனக் கருளியவா றார்பெறுவாரச்சோவே." என இருத்தல் நிச்சயமே.

பத்திக்குக் குறைவான செய்கைகள்.

பத்திக்கு விரோதமான காரியங்களை விலக்கிநடப்பது பத்தியெனும் பயிருக்குக் களைபறித்தல் போலாகும். திருக்கோயில், திருநந்தவனம், தீர்த்தங்கள், மடாலயங்கள், மண்டபங்கள், முதலிய உத்தமஸ்தானங்களில் செய்யத்தகாத குற்றங்களைச் செய்யாதொழிதலும், செய்பவர்கள் செய்யாதொழியும்படி செய்வதும், புண்ணியமேயாம்!

மந்தகுணம், ஆங்காரம் முதலிய விலக்கற்பாலனவாகிய குணங்களை விளைவிப்பனவாகியபோசனபதார்த்தங்களை விலக்கலும் வேண்டும். தீயாரோடுசகவாசம் செய்யாதொழிதலும் பத்திக்குவிரோதம் செய்வோர்களும் காமிகளும் இருக்கும் சங்கங்களில் சேராதொழிதலும்; சீவஹிம்சை, நீதிவிரோதம், பகை, விரோதம், மாச்சரியம், கொலை, களவு, கள், காமம், குருநிந்தனை, பெரியோர்நிந்தனை, தெய்வநிந்தனை, சமயவிஷயங்களில் குதர்க்கம், வீண்வாதம், செய்யாதொழிதலும்; இவைகளைச் செய்பவர்களுடன் சேராதொழிதலும், பத்தியைவளர்ப்பதற்கு அவசியமானவைகளே. இக்குற்றங்கள் கல்வியறிவில்லோரும் இழிந்தோரும் செய்யும்செய்கைகளே.

உலகத்தில் ஓரோர்காலத்தில் மகான்கள் சென்மமெடுத்து உலகத்துக்கு அநேக நன்மைகளைச்செய்து போயிருக்கின்றனரே. "மலமகல் பவரும் புவிமீதே மானுடவடிவந் தனையெய்திச், சிலபகலெனினும் பயில்காலைச் சேர்தரு மலவாதனை" யாதல்பற்றி அவர்கள் பூலோகத்தில் இருந்தகாலத்தில் யாதொருகுற்றம் செய்தனரேயாயினும், அவர்கள்செய்த பரோபகாரம் சிவபுண்ணியம் முதலிய நன்மைகளைக் கைக்கொண்டு, குற்றமிருப்பினும் அதைநாம் கவனிக்கற்பால தன்றென விடுக்கவேண்டிய தன்றோபெருமை. இருஷிமூலம், நதிமூலம், அறிவுமூலம், நாம்விசாரிக்கப்புக நாமெம்மாத்திரம்? ஓரோர் ஸ்தலத்தின்மீதும், ஓரோர் மூர்த்திமீதும், ஓரோர்குருமுதலாயபெரியோர் மீதும், அவர்களால் செய்யப்பட்ட நூல்களிலும், ஓரோர் விசேஷ அபிமானம்பற்றி விசேஷ பத்திவைத்தலும் உலகவழக்கா யிருக்கக் காண்கின்றோமே. அஃதெவ்வகையா யிருப்பினும் அதேகாரணமாகப் பத்திவிர்த்தியாகி அவ்வழிநிற்கும் பத்தர்களும் நல்வழி யடையலாமே. திருவருட்பிரகாச வள்ளலாரென்னும் இராமலிங்க சுவாமிகளாற் சொல்லப்பட்ட அருட்பா வென்னும் நூலில் அநேக நல்விஷயங்க ளிருப்பனவும், அவர்கள்மேல் அபிமான முடையோர் ஆயிரக்கணக்கான பேர்கள் அவர்கள்மீதும், அந்நூல்மீதும் மிகுந்தபத்திவைதது அந்நூலைப் பாராயணம் செய்வதும், அந்நூலிலிருந்து அநேகமேற்கோள்கள் எடுத்துக் கூறுவதும் கண்டும் கேட்டுமிருக்கின்றோமே. ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுகநாவல ரவர்களிருந்தகாலத்தில் நாவலரவர்களால் எழுதப்பட்ட நூல்களினாலும், செய்யப்பட்ட பிரசங்கங்களினாலும் குருபூசை மடங்கள் வித்தியாசாலைகள் முதலிய ஸ்தாபனங்களினாலும், பல இடங்களிலும் சமயம்முயற்சி ஊக்கம் குறைந்திருந்த காலத்தில் செய்யப்பட்ட இப்பரோபகாரச் செய்கைகளால் ஆயிரக்கணக்கான பேர்கள் எவ்வளவோ நன்மைகளை யடைந்திருக்கின்றனரே; அல்லாமலும் அவர்கள்மீதும் அவர்களால் செய்யப்பட்ட நூல்கள் மீதும் அதிகபத்தியும் அபிமானமு முடையவர்களா யிருக்கின்றனரே. ஆதலால் இம்மகான்கள்மீது பத்திவைத் திருப்பவர்களாகிய அநேகர்களுடைய பத்திக்கும் மனதுக்கும் விரோதமும் வருத்தமு முண்டாகும்படியான வார்த்தைகளை யெழுதியும் பிரசங்கம் முதலியன செய்தும் ஆயிரக்கணக்கான அநேக பத்தர்கள் மனது வருந்தும்படி விரோதம் மாச்சரியம் முதலியவற்றை விளைவிப்பது மன்றி மேலும் அச்செய்கைகளை நீடிக்கச்செய்தும் வருவதுதருமமன்றே. "தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்பதன்றி, எரிவாய் நிரயத்து வீழ்வர்கொலென்று பரிவதூஉம் சான்றோர் கடன்." பரமபதியின் திருநாமமும் ஸ்தோத்திரமும் சேர்ந்திருக்கும் விசேஷ மகிமையினால் அம்மகான்கள் செய்த நூல்களையும், அவர்களையும், நிந்தித்தல்மகாதோஷமென நிந்தியாதொழிதலும் பெரும்கடனே. நிந்தனை செய்வோர்கள் நிந்தியாதொழியும் வண்ணம் சொல்லி நடத்துதலும், பத்தியையும், சமயத்தையும், விர்த்திசெய்வதும் அறிவுடைய பெரியோர் கடமையே.

கவனிப்பு :—தற்காலத்தில், பத்தியை அநேகர் அலட்சியம் செய்தலால் பத்தியின் இன்றியமையாமையை வற்புறுத்து நோக்கமாகச் சிற்றறிவுக்குப்புலப்பட்ட வரையும் எழுதப் புகுந்தமையால் அறிவுடைய மேலோர்கள் எக்குற்ற மிருப்பினும் மன்னித்துத் திருத்தி யருளும்கடமை அவர்களதே.

வாழ்கவந்தணர் வானவரானினம், வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக,
ஆழ்க தீயதெல்லா மரனாமமே, சூழ்கவையகமுந் துயர்தீரவே.

திருச்சிற்றம்பலம்.